வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 23.7.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி 4 நாள் பயணமாக இங்கிலாந்து மற்றும் மாலத் தீவு நாடுகளுக்கு இன்று புறப்பட்டு சென்றார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 27 ஆம் தேதி இரண்டு நாள் பயணமாக தமிழகம் வருகிறார்.

தேசிய ஒலிபரப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

புதுச்சேரி பகுதிகளில் தற்காலிக பட்டாசு சில்லறை விற்பனை கடை வைக்க விருப்பம் உள்ளவர்கள், ஆன் லைன் மூலம் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சி துறை நடுவர் திரு குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

மோடி (15)

பிரதமர் திரு நரேந்திர மோடி இங்கிலாந்து மற்றும் மாலத்தீவுகளுக்கு 4 நாள் பயணமாக இன்று பிற்பகல் புறப்பட்டு சென்றுள்ளார். தனது சுற்றுப் பயணத்தின் முதல் கட்டமாக லண்டன் செல்லும் அவர், இங்கிலாந்து

பிரதமர் திரு கெய்ர் ஸ்டார்மர், அந்நாட்டு மன்னர் மூன்றாம் சார்லஸ் ஆகியோருடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். பிரதமர் பயணம் மேற்கொள்ளும் முன் வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவும்-இங்கிலாந்தும் அண்மைக் காலங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கானும் வகையில், வலுவான கூட்டாண்மையை பகிர்ந்து கொள்வதாக தெரிவித்துள்ளார். வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், புதுமையாக்கம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேம்பட்டு வருவதாகவும் பிரதமர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். பிரதமர் தமது பயணத்தின் இரண்டாம் கட்டத்தில், மாலத்தீவு அதிபர் திரு முகமது முய்சு-வின் அழைப்பின் பேரில் ஜூலை 25 ஆம் தேதி அந்நாட்டுக்கு செல்கிறார். அந்நாட்டின் 60 ஆவது சுதந்திர ஆண்டு விழாவிலும் பங்கேற்கிறார்.

மோடி-திலகர் (11)

சுதந்திர போராட்ட வீரர்கள் லோகமானிய பாலகங்காதர திலகர் மற்றும் சந்திரசேகர ஆசாத்தின் பிறந்த நாளை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களுக்கு மரியாதை செலுத்தி உள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், நாட்டின் சுதந்திர போராட்ட

இயக்கத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்ற உணர்வை மக்களிடையே எழுச்சி பெற செய்தவர் திலகர் என்று புகழாரம் சூட்டி உள்ளார்.

சுதந்திர போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவாவின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில், பாரதியார், வ உ சிதம்பரனார் ஆகியோருடன் இணைந்து ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராக வீர முழக்கம் செய்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

மோடி தமிழகம் (14)

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 27 ஆம் தேதி 2 நாள் பயணமாக தமிழகம் வருகிறார். அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் 27 ஆம் தேதி நடைபெறும் விழாவில், முதலாம் ராஜேந்திர சோழனின் கங்கை வெற்றியின் ஆயிரமாவது ஆண்டு விழாவில் அவர் பங்கேற்கிறார். யுனெஸ்கோவால் உலக பாரம்பரிய தலமாக அறிவிக்கப்பட்டுள்ள பிரகதீஸ்வரர் கோவிலில் நடைபெறும் இவ்விழாவில் நினைவு நாணயத்தையும் பிரதமர் வெளியிட உள்ளார். இந்நிகழ்வை ஒட்டி, முதலாம் ராஜேந்திர சோழனின் கங்கை பயணம் மற்றும் கடாரம் பயணம்

குறித்தும், சைவம் மற்றும் சோழ சகாப்தம் தொடர்பான புகைப்பட கண்காட்சிக்கும் இந்திய தொல்லியல் துறை ஏற்பாடு செய்துள்ளது. அதனை தொடர்ந்து தூத்துக்குடியில் மேம்படுத்தப்பட்ட மற்றும் நவீனமயமாக்கப்பட்ட விமான நிலையத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இம்மாதம் 28 ஆம் தேதி திறந்து வைக்கிறார். 1992 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த விமான நிலையம் 381 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப் பட்டுள்ளது.

தேசிய ஒலிபரப்பு 1 (4)

தேசிய ஒலிபரப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் வளர்ச்சி, கல்வி தொடர்பான முன்னேற்றங்கள், கலாச்சார பாதுகாப்பு போன்றவற்றில் ஒலிபரப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் தேசிய ஒலிபரப்புத் தினம் கொண்டாடப் படுகிறது. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு....

**வாய்ஸ்**

தேசிய ஒலிபரப்பு 2(16)

**(வாய்ஸ்)**

கடந்த 1927 ஆம் ஆண்டு இதே நாளில் இண்டியன் பிராட்காஸ்டிங் கம்பெனி என்ற பெயரில் மும்பையில் இருந்து நாட்டின் முதலாவது வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பானது. சுதந்திர போராட்டக் காலத்தின் போது தகவல்களை பரப்புவதற்கும், ஒற்றுமையை வளர்ப்பதற்கும் உரிய ஒரு சக்தி வாய்ந்த கருவியாக வானொலி திகழ்ந்தது. சுதந்திரத்திற்கு பிறகு எழுத்தறிவு, சுகாதார விழிப்புணர்வு மற்றும் விவசாய தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்கு வகித்தது. 1956 ஆம் ஆண்டு ஆகாஷ்வாணி என்று பெயர் மாற்றம் பெற்றது. அதனை தொடர்ந்து 1957 ஆம் ஆண்டு திரைப்பட இசையை ஒலிபரப்பும் வகையில் விவித் பாரதி சேவை தொடங்கப்பட்டது. தேசிய ஒலிபரப்பு தினத்தை ஒட்டி பிரசார் பாரதி தலைவர் திரு நவ்நீத் குமார் சேகல் கூறுகையில், ஆகாஷ்வாணி பல ஆண்டுகளாக கல்வி, தகவல் மற்றும் பொழுதுபோக்கை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றி வருவதாக தெரிவித்தார்.

பிரசார் பாரதியின் தலைமை நிர்வாக அதிகாரி திரு கவுரவ் திவேதி கூறுகையில், 90 ஆண்டுகால தேசிய பாரம்பரியமாக ஆகாஷ்வாணி இன்னும் வலுவாக உள்ளது என்றார் அவர் மேலும் கூறுகையில்.....

**(வாய்ஸ்)**

முருகன் (15)

இன்று நடைபெற்ற நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில், தென்னிந்திய மொழிகளில் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி சேனல்களை தூர்தர்ஷனின் டிடி ப்ரீ டிஷ்ஷில் இடம் பெற  செய்வது உள்ளிட்ட கேள்விகளுக்கு மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் பதில் அளித்தார். அப்போது, தொலைதூர கிராமத்தில் உள்ள மக்களும் பயன்பெறும் வகையில் டிடி ப்ரீ டிஷ் சேவை வழங்கி வருவதாகவும், கடந்த 2024 ஆம் ஆண்டு நிலவரப்படி, நாடு முழுவதும் 49 மில்லியன் வீடுகளை இச்சேவை சென்றடைவதாகவும் தெரிவித்துள்ளார். டிடி ப்ரீ டிஷ்ஷில் தென்னிந்திய மொழி சேனல்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் டாக்டர் எல் முருகன் கூறினார். அண்மையில், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட தென்னிந்திய மொழி சேனல்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் குறித்த தகவல்களை தெரிவித்த அவர், தென்னிந்திய தொலைக்காட்சி சேனல்கள் அதிக அளவில் இடம்பெறும் வகையில் விதிமுறைகள் எளிமைப் படுத்தப்பட்டு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் (5)

பல்வேறு பிரச்சனைகள் குறித்து எதிர்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது. முன்னதாக, இன்று காலை 11 மணிக்கு இரு அவைகளின் நடவடிக்கைகளும் தொடங்கிய போது, எதிர்கட்சி உறுப்பினர்களின் அமளி காரணமாக, பிற்பகல் 2 மணி வரை இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டன.

குடியரசு துணை தலைவர் (8)

குடியரசு துணைத் தலைவர் பதவியில் இருந்து திரு ஜக்திப் தன்கர் ராஜினாமா செய்ததை அடுத்து, புதிய குடியரசு துணைத் தலைவர் பதவி தேர்வுக்கான, நடைமுறைகளை தேர்தல் ஆணையம் தொடங்கி உள்ளது. அரசியல் சாசனத்தின் 324 ஆவது பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் இப்பணிகள் நிறைவடைந்த பின்னர், இதற்கான தேர்தல் அட்டவணையை தேர்தல் ஆணையம் வெளியிடும். மாநிலங்களவை-மக்களவை மற்றும் நியமன உறுப்பினர்கள் கொண்ட பட்டியலை தயாரிக்கும் பணி தற்போது முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*புதுச்சேரி-பட்டாசு* 1(5)

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புதுச்சேரி பகுதிகளில் தற்காலிக பட்டாசு சில்லறை விற்பனை கடை வைக்க விருப்பம் உள்ளவர்கள் இடமிருந்து ஆன் லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சி துறை நடுவர் திரு குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். இதுகுறித்த செய்தித் தொகுப்பு......

**(வாய்ஸ்)**

*புதுச்சேரி-பட்டாசு 2* (7)

**(வாய்ஸ்)**

தற்காலிக பட்டாசுக் கடை வைப்பதற்கான விண்ணப்பங்களை SWS Collectorate.py.gov.in என்ற இணையதள முகவரியில் நாளை முதல் அடுத்த மாதம் 21 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சி துறை நடுவர் திரு குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். அறிவிக்கப்பட்ட தேதிகளுக்குள் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே தீபாவளி பட்டாசு கடை உரிமத்திற்கான பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

*சித்தா* (5)

புதுச்சேரி ஆயுஷ் மருத்துவ துறை, ஸ்ரீ அரவிந்தோ சொசைட்டி மத்திய சித்தா ஆராய்ச்சி கவுன்சில் ஆகியவை சார்பில் இன்று புதுச்சேரியில் நடைபெற்ற சித்த மருத்துவ கருத்தரங்கில் இந்தியா மட்டுமன்றி பல்வேறு உலக நாடுகளில் இருந்தும் சித்த மருத்துவர்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட தமிழகத்தை சேர்ந்த சித்த மருத்துவர் சிவராமன் கூறுகையில்.......

**வாய்ஸ்**

*கிரிக்கெட்* (5)

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4 வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று பிற்பகல்3.30 மணிக்கு தொடங்கியது. இங்கிலாந்தின் மான்செஸ்டரில் நடைபெறும் இந்த போட்டியில் முதலில் ஆட தொடங்கிய இந்திய அணி, சற்று முன் வரை, ------ ஓவரில், ----- விக்கெட்டிற்கு ------ ரன்கள் எடுத்துள்ளது.

*வானிலை* (5)

தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த 4 நாட்களுக்கு தமிழகத்தின் ஒரு சில

இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும், இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.